2005 மார்ச் 17]

190—

பள்ளியைச் சீரமைத்தல்

•16479—திரு. கோ. இரவிராஜ்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்டம், பெரியகளக்காட்டூரில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல அரசு உயர்நிலைப் பள்ளி பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை. (அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பெரியகளக்காட்டூரில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் 5 வகுப்பறைகள் மற்றும் தாழ்வாரத்திற்குப் புதிய சிமெண்ட் தரை போடுதல், பழுதடைந்த கதவு மற்றும் ஜன்னல்களை மாற்றி அமைத்தல், எல்லா வகுப்புகளுக்கும் மின்சார வசதி ஏற்படுத்துதல், பழுதடைந்த ஓட்டு கூரைக்குப் பதில், ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஷீட்டினாலான கூரை வேய்தல், சமையல் அறை மற்றும் கழிப்பறைகள் பழுதுநீக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் யாவும் முடிக்கப்பட்டு, பள்ளி நல்ல முறையில் இயங்கி வருகிறது.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட கேள்வி. எனது தொகுதி பெரியகளக்காட்டூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக இயங்கி வந்த அரசு உயர்நிலைப் பள்ளியை நேரடியாகச் சென்று பார்க்கிறபோது அங்கே கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையிலே, இடிந்து விழக்கூடிய நிலையிலே இருந்து, அங்கே படித்த மாணவர்கள் பயந்துகொண்டு மரத்தடியிலே அமர்ந்து கல்வி பயின்றதை நான் நேரிலே பார்த்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது கட்டபபட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொன்னதற்காக நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியிலே இயங்கிவரும் திருத்தணி மாணவியர் விடுதி, திருவேலங்காடு ஆண்கள் விடுதி.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருத்தணி ஆண்கள் விடுதி, பெரியகளக்காட்டூர் ஆண்கள் விடுதி, திருத்தணி அரசு கல்லூரியில் இயங்கி வருகிற ஆண்கள் விடுதி ஆகியவை வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆகவே, அரசு நிதியின் மூலமாக இந்த நிதியாண்டிலே சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதேபோல, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 28 அரசு ஆண்கள் மாணவர் விடுதிகளிலும், 9 அரசு பெண்கள் விடுதிகளிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளில் சில குறைபாடுகள் இருப்பதாக புகார் வருகின்றது. அவற்றைப் போக்கிட மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திருவள்ளூர் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் 37 மாணவ, மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த 21 விடுதிகளுக்கும் அரசுக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு, 8 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விடுதிகளுக்கு கட்டடப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிடர் நலத் துறையில், குறிப்பாக ஆதிதிராவிட மக்களின்பால் அதிகம் அக்கறை கொண்டுள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு முழுவதும் உள்ள 1076 விடுதிகளில், 574 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த அந்த விடுதிகளை எல்லாம் இந்த ஆண்டோடு முழுமையாக 574 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டி சாதனை படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான். சுதந்திரமடைந்து இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பாக ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே இது வரலாற்றுச் சாதனையாக, இந்தியாவிலுள்ள முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக — முதல்வராக விளங்கி வருகிற முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர், விடுதிகளில் தங்கிப் படிக்கிற மாணவ, மாணவியர்களுக்கு உணவுகளில் ஏதோ குறைபாடு இருப்பதாக சும்மா பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. எந்த

2005 மார்ச் 17]

விடுதியிலாவது குறைபாடுகள் ஏற்படுமேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கடந்த ஆட்சியிலே, தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு உணவு மானியம் ஒரு மாணவருக்கு 225 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இப்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 300 ரூபாயாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல தரமான, சத்தான உணவு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையிலும் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஆதிதிராவிட மக்களினுடைய கல்வித் தரம் உயர்ந்து வருகிறது. அந்த மக்கள் அதிகமான அளவிற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு அரணாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லி, அங்கே இருக்கக்கூடிய ஊழியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நல்ல எண்ணத்திலேதான் நான் அதைக் குறிப்பிட விரும்பவில்லை. வேண்டுமானால், தனிப்பட்ட முறையிலே அமைச்சர் அவர்களிடத்திலே சொல்கிறேன். அவர்கள் ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை மட்டும் கோரிக்கையாக வைத்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hostels விவகாரத்திலே அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது தவறு எங்கே நடந்தாலும் சொல்லுங்கள், தவறில்லை என்று சொன்னார்கள். எனக்குக் கருத்து வேறுபாடுகள் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னாலே S.C., S.T. Hostels எல்லாம் நல்ல நிலையில் இருக்கின்றன என்பது உண்மைதான். உண்டு உறைவிடப் பள்ளிகள் மலைப் பகுதிகளிலே இருந்து கொண்டிருக்கின்றன. செங்கம், போளூர், கலசப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்டது ஜமுனாமுத்தூர்.

அங்கே உண்டு உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. கடந்த மாதம்கூட அந்தக் குழந்தைகளுக்கு போளூரிலிருந்து அரிசியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். மலைக்கே போகவில்லை, வழியிலேயே விற்றுவிடுகிறார்கள். விற்றுக்கொண்டு, (குறுக்கீடு) Case ஆகி நான்கூட கலெக்டர் மற்றும் D.R.O. ஆகியோரிடம் பேசியிருக்கிறேன். Case இருக்கிறது. அந்தக் குழந்தைகளை வீட்டுக்குத் துரத்திவிட்டு அரிசியைக் கொண்டுபோய் விற்று விடுகிறார்கள். வழக்கு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதை அமைச்சர் அவர்களுடைய knowledge-க்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கேள்வி என்பதைச் சொல்லுங்கள்.

திரு. போளூர் வரதன்: அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறையாகச் சொல்லவில்லை. தவறுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கொண்டுவாருங்கள். கேள்வியைச் சொல்லுங்கள்..

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரங்களுடன் புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 191, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

191—

பேருந்து வசதி

***53542—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, அரியலூரிலிருந்து கள்ளாங்குறிச்சி, கடுகூர், ஆனந்தவாடி, இரும்புலிக்குறிச்சி, குமிளியம், பரணம், உடையார் பாளையம் வழியாக ஜெயங்கொண்டம் வரை செல்ல அரசு பேருந்து வசதி செய்து தருமா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS